

31 AUG 1925
MADRAS

உ

சிவமயம்.

விநாயகர் பதினெண்பதிகம்.

இஃது

திரிசிரபுரம் ஆண்டார்வீதி வாசி பார்க்கவகுல நந்தம

(ரப்பர் ஸ்டேம்பு வியாபாரம்)

ஸ்ரீ தி.மு. வேலாயுதம் பிள்ளையவர்களால்

தனுஷ்கோடி

ரயில்ஸ்டேஷனின் பக்கலிலுள்ள

திருவாலயத்தி லெழுந்தருளாநின்ற வரசித்திவிநாயகர்பேரில்

வரையப்பெற்று,

ஷை யூர்

என். ஆர். ரூம். புரோப்ரைட்டர்

மகா-[illegible] சுப்[illegible]யர் அவர்களால்

[illegible]ச் சி

[illegible]யிற் பதிப்பிக்கப்பெற்றது.

[illegible] ஆனிமீ 18உ.

வி[illegible] 25 அணா 2.

77
Q.24:417
N25
22-3210

Q24:417 244:81 NX 936

உ

சிவமயம்.

அரியானை யரன்மாலுக் ககண்டபே ரொளியானைத்
தெரியானை யன்பிலர்தந் தேசமனம் வாக்சதனுக்
குரியானை யன்பர்தமக் குயர்பெரியா னின்றெடுத்த
பெரியானைக் கணபதியின் பிறங்கியபொற் பாதம்பணிவாம்.

"நிஷ்டானுபூதி"

முகவுரை

அப்பு, தேயு, வாயு, பிரிதிவி, ஆகாயம், எனப்படும் ஐவகைப் பூதங்களுடனும் ஒருங்கேகூட்டி யமைக்கப்பெற்றுள்ள இப்பிரபஞ்சத்தின்மை, சீர்சால் கண்டங்கள் அனேகவற்றுள் பரதகண்டம் மிகவும் சிறந்ததேயாம். அன்றியும், மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் திரு விசேஷங்களையுமுடையனவாயும் ஏனைய புண்ணிய நதிகளால் ஊடுருவிச் செல்லப்பட்டதும் ஓங்கி யுயர்ந்து வளர்ந்துள்ள தெய்வீக குன்றுகளினால் சூழப்பட்டதும், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், ஞானசம்பந்தர் முதலிய சைவ சமயாச்சாரியர்களால் புகழ்ந்து பாடப் பட்டதும், மற்றும்சில ஜீவன் முக்தர்களால் ஒப்பிலாப் புவியென உயர்ந்துரைக்கபபட்டதும், செந்தமிழ் பாஷைக் குறைவிடமாயும் எளிதில் கற்றற்கரிய, வேதாந்த சாஸ்திரங்கள், வைத்திய சாஸ்திரங்கள், சோதிஷ கிரந்தங்கள், மதனசாஸ்திரங்கள், மாந்திரீக நூல்கள் ஈஸ்வரஞானபோத சித்தாந்த நூல்கள், ஆத்மஞான நூல்கள், ரசாயனசாஸ்திரங்கள், ஞானயோக நூல்கள், ஜடதத்துவ கிரந்தங்கள், பூமி தத்துவம், மனோதத்துவம், பிராண தத்துவம், இந்திரிய தத்துவம், விவேக தத்துவம், அஞ்ஞான தத்துவம், விஞ்ஞான தத்துவம், ஞான தத்துவம், ஆரூட தத்துவம், முதலிய ஏனைய தத்துவசாஸ்திரங்களுக்கு பிறப்பிடமாயும் மற்றும் தொன்றுதொட்டு சர்வேஸ்வரனின் பிரதிபிம்பங்களாகிய தெய்வீக மன்னர்களால் அரசாளப் பட்டுவந்ததுமான பூலோககயிலை யென்னுமித் தக்கணப் பிரதேசத்தில் உதித்துள்ள சொல்லவொண்ணு சிறப்புவாய்ந்த ஹிந்துகுலந் தோன்றல்களாகிய நாம், மாயாஸ்வரூபமாயுள்ள இப்புவியில் சனனம்கொண்டதின் நிமித்தம் இம்மையில் முற்றறிவும், முற்றுத் தொழிலையுமுடைய அநாதிமலராகிதனுகிய பரமபிதாவின் அருளைப் பெறவேண்டியும் மறுமைப்பயனை குறைவரவடைய வேண்டியும் "நீரில் யாக்கை" யென்பதற்கேற்ப அல்ப ஆயுளையும் நிலையில்லா

சரீரத்தையுமுடைய நாம், காலன்வந்து நம்மை கவர்ந்து செல்லு முன்பே அநுஷ்டிக்கவேண்டிய தோத்திரதவங்கள் நூற்றுக் கணக்கான விதங்களிலுள வெனினும் அவற்றுளெல்லாம் மிகச்சிறந்ததும், நினைக்கும் காரியங்களையும் "அறம் பொருளின்பம் வீடு" என்னும் சதுர்வித புருஷார்த்தங்களையும் எளிதில் அளிக்கவல்லதும், ஒன்றாகியும், பலவாகியும், அருவாகியும், வுருவாகியும் எல்லா உலகத்தினும நீக்கமற்று நிறைந்திருக்கின்ற சுயஞ்சோதிஸ்வரூபமே உலகமெல்லாம் உய்யும்படியாகவும், சகல புவனங்களுக்கும் தமது சரண பங்கயங்களைத் தொழுது முத்தியடையும்படியாகவும் பிரணவத்தினின்றும் சகளீகரித்துக் கணபதி, அங்குசபாசமேந்தி, அம்பிகை தநயன், அருமருள் ஆகுவாகனன், இறைமகன், ஈசன்மைந்தன், ஏகதந்தன், ஏரம்பன், ஐங்கரன், ஒற்றைக்கொம்பன், கங்கைபெற்றோன், கயமுகன், கவுரிசேயன், காமன்மைத்துனன், நால்வாயன், பாசாங்குசன், முக்கண்ணன், முன்னோன், மூத்தோன், விக்கினேச்சுரன் என்னுமிருபத்தோர் திருநாமங்களையுமுடைய கரிமுகனின் திருத்தோத்திரமேயாகும். அவருடைய திருவவதார மூர்த்திகளைப் பூசிப்பதாலும், திருவுருவங்களை மனதிற் றியானிப்பதாலும் இருவினைகளினின்றும் நீங்கிமும்மலங்களையு மொழித்து நான்குபயன்களையுமடைவோமென்பதற் கையமில்லை. மைசூர் துர்பங்கா முதலிய தேசங்களின் மன்னர்களின் பொருளுதவியைக்கொண்டு முன்னர் தலைமை போஸ்ட்மாஸ்டராயிருந்த மகா-ள-ள-ஸ்ரீ அகரம் நாராயணராவ் அவர்களால் 1916ம் ஆண்டு பிப்ரவரீமீ 10ம் தேதி கட்டி முடிவுறப்பெற்றதும், இப்பரதகண்டத்தின கடைமுனையும் ராமநாதபுரம் ஜில்லாவின் ஓர்பகுதியும் ராமபிரானால் புகழ்ந்துரைக்கப்பட்டதுமான ஆதி சேதுவில் அமைக்கப்பட்டுள்ள ஆலயத்தில் எழுந்தருளாநின்ற ஓங்காரப் பிரணவஸ்வரூப வரசித்திவிநாயகரின்மீது தமியேன் ஒரு சிறியன் அற்பத்துக்கற்பமாகிய கல்வியுடையோன் பதிகம் பாடத் துணிந்தமை மிக்க வியக்கத்தக்கதேயாகும்.

இப்புத்தகம் அச்சிட்டு வெளிப்படவேண்டுமென்று பொருள் அளித்துதவிய மகா-ள-ள-ஸ்ரீ வீ. சுப்பையர் அவர்களை நிமிடமேனும் மறக்கப்பாலதோ.

தி. மு. வேலாயுதம் பிள்ளை,

திருச்சிராப்பள்ளி.

கடவுள் துணை.

நித்திய பாராயணப்பதிகம்.

1. பிள்ளையிலாமாந்த ரல்லல்கொண்டேகும் கிள்ளைநாசியூரிலே, கொள்ளைகொள்ளரக்க ராவணன்றன்னைக், கொலைபுரிந்தனா நாட்டிய நகரிலே, ரகுகுலராமன் மிகுவானரிடிவேடமறுத்தே பட்டாபிஷேகம்கொண்ட தீவிலே, சடுதியிலனுமான் வானரர்களைக்கொண்டுமே சட்டமாகவணையிட்ட விந்தியிலே, இருபுறமு மாமாழியேங்கலா பொன்னாகவே சேரும்நன் னாடதனிலே, குருவாக வுதிக்கவொரு ராமநாதன் கருவானபடிலிங்கம் கண்ணோக்கத்திலே, சிறிதான கோவில்தனை அரிதாய்கொண்டுள சித்திவிநாயகா கரிமாமுகனே துதித்தேன், போற்றினேனாட்கொண்டருளுவாயே.

2. அனுதினமும் தவமியற்றிடும் சோர்வைமுத்து ராமலிங்கசேது பதிதான் அரசுபுரி நன்னாட்டிலே, மணமுடனந்தனர் [illegible] மாந்தர் செழிக்கவே மாவேள்விகள் [illegible] நகரிலே, தனவந்தரிம்மையில் தயையுடையனென்று சென்றுதான் நீராடும் நற்றுறையிலே, அனல்சகியா வாடவர்தா மமைதியுடன்சென்று நீரோங்கும் கிணாருகிலே, வானவர் புகழ்ந்திடும் வனத்தில் சிறந்தவொரு மணலானதென்றிசையிலே, வீணான வாழ்வதனை வேண்டாதமக்கள்தாம், நினைவேண்டியேயுய்யும்படிக்கு, சிறிதான கோவில்தனை அரிதாய்கொண்டுள சித்திவிநாயகா கரிமாமுகனே துதித்தேன், போற்றினேனாட்கொண்டருளுவாயே.

3. மின்னும்விண்ணரியவொளி யீன்றிடும் தங்கமும்பகைக்கிடு நின்திடமான விமானமழகும், கண்கொண்டு நோக்கிடும் விண்ணவர் தாமும் மிகுவான வியப்படையும் நின்ஸ்தூபியினழகும், நாற்புறமு மோங்கியே நாவலரும் புகழவேதானின்றிடும் நின் திருமதிலினழகும், கற்பகமும் தாழ்வென நினைக்கவேதான் காலையிலு மாலையிலும் கன. முடநிழலீயும் அரசினழகும், விற்பகமே காமதேனு மொவ்வாத, தினந்தினமும் தெள்ளமுதா யீன்றிடும் நின் திருக்கூவலினழகும் நற்றெய்வமே கற்கண்டே தேனே செப்புதற்கொரு நாவுதான் போதுமோ, சிறிதான கோவில்தனை அரிதாய்கொண்டுள சித்திவிநாயகா கரிமாமுகனே துதித்தேன், போற்றினேனாட்கொண்டருளுவாயே.

4. பாரினில் மாந்தர்கள் பக்திகொண்டுதித்திடும் பார்ப்பணுபாஞ் சுடரே ஒற்றைக்கொம்பா, சிந்தூரசம்மாரு கார்நிறமேனே கயிலைநாதா கண்கண்ட கற்பகயானையே நறுங்கையாந்த கரைபுட்பவினோதா எல்லாம் வல்வினையை யெளிதினி லளித்திடும் ஏகமே, அன்னையாள் வல்லபைதனை பூவிலன்புடன் மணந்ததேவா, தங்கமேனியனே தயாபரா எங்கெங்கும் நிறைந்தபொருளே, அங்கம்சிறந்துயர்ந்த புண்ணியா யானைமுகா பசாங்குசா. சிறிதான கோவில்தனை அரிதாய்கொண்டுள சித்திவிநாயகா கரிமாமுகனே துதித்தேன், போற்றினே னாட்கொண்டருளுவாயே.

5. சீர்சிறந்தோங்கு மிவ்வுலகே சிறுவன்யான் விழிகொண்டு நோக்க, பார்புகழும் நின்கார்முகமும் சிறுதூய் நீரணிந்தநெற்றியும், மாமேருபோன்ற வயிறும் மானிலத்தோர் கண்டானந்திக்கு மிரு [illegible] திருநீரணிநெற்றியில் திருவெண்ணிலா வினழகும், மதலை சொல்விழா பொழியும் குழவி கோவிகண்களினழகும். தண்டாமரைக்கடவுளரே நின் கனை[illegible] பார்வையென்னே. சிறிதான கோவில்தனை அரிதாய்கொண்டுள சித்திவிநாயகா கரிமாமுகனே துதித்தேன், போற்றினே னாட்கொண்டருளுவாயே.

6. சற்குருவே நின்நாற்கால்களினுயர்வும் நீண்டதோர் துதிக்கையினழகும், தற்பரா பொற்பாத சதுர்மலரும், பேரொளியொளித்திடும் தளதளவென்னு முடியம், காதிலணி கவசகுண்டலத்தி னழகும், இன்றும்கண்டிலா நற்றிலகத்தின்வாய்மையும், சங்கராநின் ஜங்கரத்தினழகும் சிங்கார சந்தனப்பொட்டின் றாய்மையும், வாங்கவும்வுயிரதனைசிதைத்துமே செவிதனில்மாட்டியுள வங்குசத்தினழகும், மண்ணனதில் மக்கள்தாம் மதிக்கவொண்ணு மாரிலணி அபரணங்களினழகுமென்னே. சிறிதான கோவில்தனை அரிகாய்கொண்டுள சித்திவிநாயகா கரிமாமுகனே துதித்தேன், போற்றினே னாட்கொண்டருளுவாயே.

7. முன்கொம்பா, முந்நூலா முக்கண்ணார்புத்திரனே முதல்வா முப்புரமெரித்தவா, வெண்பட்டழகா தண்டாமரைத்தேவே கண்கண்ட தெய்வமே கணபதியே. கண்வெட்கும் கரிமுகனே நின்உந்திச்சுழி தான்கண்டு மெய்க்காதார் யாவருளர், சண்டமாருதக்கோனே நீண்டுளரோ மக்கள்தனை நோக்கிமகிழாதார் யாவருளர், அந்திவானிர

223210

மணியே தொந்திவயிறோனே நந்தியினர் முன்கொண்டமன்னே
வேந்தனெனும்மாலும், விமலனும் போற்றும்மணியே விண்ணொளி
விளக்கே, சிறிதான கோவில்தனை அரிதாய்க்கொண்டுள சித்திவிநாயகா
கரிமாமுகனே துதித்தேன், போற்றினே னாட்கொண்டருளுவாயே.

8. பொற்சதங்கை யணிந்தபாதா புண்ணியனே தண்டைச்சிலம்
பழகா, கற்கண்டே சொலுசணிந்தகாலா கோலாகலா குமரனார்தன்
தமையனே, தில்லையில்திருநடன மாடியதேவா எல்லையிலா வானந்த
ரூபா என்னுருயிரே, தில்லைநான் காணுமுன்னே திருவுமையாள்
புத்திரனே அல்லலெல்லாம் விடுவதெப்போ, பல்லையான் சிறந்துமே
தான் பார்த்தானந்திக்கும் நீ திருநடனமாடுவதெப்போ இல்லை
யெனும் சொல்லறியா வின்பமே இம்மையிலடியார் தமக்குகந்தபூமா,
சிறிதான கோவில்தனை அரிதாய்க்கொண்டுள சித்திவிநாயகா கரிமா
முகனே துதித்தேன், போற்றினே னாட்கொண்டருளுவாயே.

9. கருணை நிறைந்தசாகரமே கதிரவனினும் இருளைக்கடிந்
தொளிக்கும் பெருஞ்சுடரே, அருள்நிறைந்தவப்பன் நிலாமுடி பரம
சிவன் தான் பெருமைகொள் பிள்ளையாரே, திருமூலாதாரப்பொருளே
திருவிளையாடல் விளையாடியோன் தன்மகனே, குருவாயெனக்கென
வந்துகந்துதிருக்காட்சி தந்தருளுநாளுமெப்போ, ஓமென்றவக்ஷ
ரங் கொள்வொலி ஓங்காரத்தில்நின்று பிரகாசிக்கும் ஒப்பிலா விநாய
கனே, தாமென்றசத்தம் தினந்தினமும் செய்துள்ளேன் தயாபரா
தயைகொண்டென் றருள்வாயே, சிறிதான கோவில்தனை அரிதாய்
கொண்டுள சித்திவிநாயகா கரிமாமுகனே துதித்தேன், போற்றி
னே னாட்கொண்டருளுவாயே,

10 சிரமதனில் தோன்றும் சுழிமுனைநடுவினில்நின் றொளிந்
திடும் சுத்தசைதன்யமே, கரமதனில் மான்கொண்ட கயிலைபிரான்
பரமசிவன் தன்மனையாள் உமையவளெனும்தேவி, திறமுடன்வல்ல
பையை கரங்கொள்கணபதியே நின்னையாவணித் திங்கள்தனிற்றொழு
தாள் வரமெல்லாம் தந்தருளும் வல்லவனே மரம்போன்ற வென்னை நீ
சேர்த்திருக்கும் நாளுமெப்போ, அறம்பொருளின்பமும் இம்மையில்
வீடும் மறுமையில் அன்புடனீயும் நாள்தானெப்போ. சரமெனும்
சுவாசந்தனில் சந்திரன் சூரியனாய் சந்தோஷித்திருக்கும் தேவே,
சிறிதான கோவில்தனை அரிதாய்க்கொண்டுள சித்திவிநாயகா கரிமா
முகனே துதித்தேன், போற்றினே னாட்கொண்டருளுவாயே.

11. பஞ்சபூதமயமாய் கொஞ்சுங்கிளியே யிருந்துளாய் பஞ்சா
க்ஷரக் கடவுளே, பஞ்சமூர்த்திகள் தமக்குகந்தவென் னஞ்சாதரெத்
தினமே ஞானபஞ்சாக்ஷரமே, பஞ்சமெனும் வார்த்தைபாருல
கினிலெவரும் செவிகொளாது பரந்தாமா பார்த்துவருகின்றாய் நீயே,
வஞ்சகமெனும் வார்த்தையையான் கனவிலும் சிந்தைதரித்திலேன்
தஞ்சமென்றே நினையடைந்தேன், சஞ்சலமே என்றும்படும் யான்
சடாக்ஷரப்பொருளே சதாசுகித்திருக்கும நாட்களெப்போ, நஞ்
செனும் விஷமாய்நான் கொண்டுளேன் மாபாபங்கள்தனையே நஞ்
சுண்டோன் தன்மருகா சிறிதான கோவில்தனை அரிதாய்கொண்டுள
சித்திவிநாயகா கரிமாமுகனே துதித்தேன், போற்றினே னாட்கொண்
டருளுவாயே,

12. கணபதியே நீதான் கண்களைத்திறப்பதெப்போ கலை
யெனும் பெருநோய்கொண்ட வடியேன் கண்ணுறுவதெப்போ,
வெட்டவெளியைகாணுவதெப்போ திடமுடன் பேரொளியை யடைவ
தெப்போ அட்சரந்தனை யுச்சரித்திடும்யான், துன்பம்நீங்கி இ ப
முடன்வாழும் நாளுமெப்போ இருபுருவநடுவனில் இருந்திடும்தேவே
நாதவிந்து நடுநிலை காணுவதெப்போ, பூரணமடைந்தபோதம் காணுவ
தெப்போ வேதமுணர்ந்த பொருளே வேதியர்தாம் போற்றிடும் திரு
அருளே, ஒகியும் யான்கண்டிலேனே பாததெரிசனம் தந்திட்டா
லென்ன பார்ப்பணுபதரியான் அழுவதாலென்பயன் சிறிதானகோவில்
தனை அரிதாய்கொண்டுள சித்திவிநாயகா கரிமாமுகனே துதித்தேன்,
போற்றினே னாட்கொண்டருளுவாயே.

13. சிவகயிலை சேர்வதெப்போ நாதம்பிறந்ததலத்தையும் காணுவ
தெப்போ தத்துவந்தனை நீக்குவதெப்போ, தவகயிலையான் அடைவ
தெப்போ திரிகாணகளங்கமறுப்பதெப்போ உறுதியுடன் பிறவியை
நீங்குவதெப்போ' சத்தியும் சிவனும் திருமணமுற சகலவிதபலமும்
சற்குணசடாக்ஷர சதாசிவமே கொடுத்துளாய், நித்தியரூபா நின்னை
யான் காணுவதெப்போ பத்தியுடன்யான் என்றும் தொழுகின்றேன்
பரஞ்சுடரே பார்ததிநீயோ, நின்மலப்பொருளே தண்மலர்க் கடவுளே
ஷண்முகனுக்கண்ணனே என்முகவிளக்கேநன்முகத்தெய்வமே, உன்
பாதம் நம்பினேன் என்தாபம் தீர்த்தருள்வாய் கண்கண்ட ஞான
பண்டிதா, சிறிதான கோவில்தனை அரிதாய்கொண்டுள சித்தி

விநாயகா கரிமாமுகனே துதித்தேன், போற்றினே னாட்கொண் டருளுவாயே.

14. நின்வசமாவதெப்போ என்னுடலாவியிடம் பொருள்யாவும் பெண்ணாள் உமையாள்போற்றும் சுண்மணியே, மன்னேநாமிருவரும் கூடிக்கலப்பதெப்போ மண்ணதனில் யான்மவுனம் மகிழ்ந்துமே சாதிப்பதெப்போ, பொன்னே புவனத்தொழிலை பொய்யென்றுணர்வ தெப்போ, நல்வனம்தான் தவம்புரிய நாடுவதெப்போ, கண்ணேயான் நிலையிலா சமுசாரவாழ்வை நிஜமென்றெண்ணு திருப்பதெப்போ நின் பதம் சேர்வதெப்போ, பந்தமெனும் தொந்தரையான் நீங்குவ தெப்போ பாசமெனும் ஆசையையான் விடுவதெப்போ அந்தகன் யான் ஈசேநின்னடி என்மனத்தே நிறுத்தி நீயும்நானும் ஒருங்கே சேர்வதெப்போ, சிறிதான கோவில்தனை அரிதாய்கொண்டுள சித்தி விநாயகா கரிமாமுகனே துதித்தேன், போற்றினே னாட்கொண் டருளுவாயே.

15. செயலெலாம் உனதென்றறிந்து சிறுவன்யான் களித்திருப்ப தெப்போ சிற்பகமூர்த்தியே, பயல்பான்காலனை யுதைத்தபாதங்களைப் பார்த்து சுகித்திருப்பதெப்போ தையல்சுகந்தனை களாநான் விடுவ தெப்போ, திகழ்மதுரை தனில்வாழும் திருசோமசுந்தரா திருஆனைக் காவாழும் திருவப்புலிங்கா, திகழ்தில்லைவாழும் திரு நடனசிதம்பரா திருதிரிசைமலைவிளங்கும் திருமாதர்பூகா திகழ்கழுக்குன்றில்வாழும் திருக்குமரா திருராமேச்வரந்தனில்வாழும் திருராமலிங்கா திகழ் நாமமிவையெலாம் நின்திருநாமமல்லவோ தேவர்புகழ் திருக்கயிலை பிரானே, சிறிதான கோவில்தனை அரிதாய்கொண்டுள சித்திவிநாயகா கரிமாமுகனே துதித்தேன், போற்றினே னாட்கொண்டருளுவாயே.

16. ஔவையைப்போல் யான் ஒப்பிலா பாட்டுகள் பாடும் நாளெப்போ கம்பனைப்போல் யான்கவிகள் தான்யியற்றுவதெப்போ, அருணகிரியைப்போல்யான் தருண முகந்த அந்தாதிகள் அருள் சுரந்து இயற்றும்நாள்தானெப்போ, அரிதாய் குருவாய் எனக்கு வந்த திரிபுரசுந்தரா கரிமுகக்கடவுளே காருண்யசாகரமே பெரிதான கருத்தனை பொருந்தவே கொடுத்தருள்வாய் பொறியதனில் வாழும் புண்ணியனே சுசீலா அல்லல்கொண்ட இல்லறவாழ்கைதனை யகற்று வாய் நீதானே அம்பராஉம்பனே செல்வினைக்கதிபதியே சொல்லறியா

நாயகமே பின்வினையகற்றியே முன்வினை மன்னித்தருள்வாய், சிறிதான கோவில்தனை அரிதாய்கொண்டுள சித்திவிநாயகா கரிமாமுகனே துதித்தேன், போற்றினேன் ஆட்கொண்டருளுவாயே.

17. வக்கிரதுண்டா, விக்கினராசா, மயூரேசா மகோற்கடா, பாலசந்திரா, கசானனா, வல்லபா, சிந்தாமணீ. தந்தையே தாயே, எந்தையே ஈசே, போதமே பொருளே நாதமே நான்மறையே, அரியே அயனே சத்தியே சதாசிவமே பத்தியே புத்தியே, பந்தமே பாசமே, முத்தியே மோக்ஷமே, ஏகமே யானே, தேகமே தேவனே, அண்டமே பிண்டமே, திருநாடி வாதபித்த சிலேட்டுமம் யென்னை வருத்தாது ஆட்கொண்டுமே, அஞ்சாநிலைமை யருளியே எந்நாளும் பஞ்சாக்ஷர மோதவைப்பாய், சிறிதான கோவில்தனை அரிதாய்கொண்டுள சித்திவிநாயகா கரிமமுகனே துதித்தேன், போற்றினேன் ஆட்கொண்டருளுவாயே.

18. மால்மருகா, மாமுருகன்றனைவா மாவேழமுகனே மாபரசிவன்குழவியே சரணம், அந்திவானிரயணியே சாந்திவயிரோனே பான்வந்திங்கும் மதவானையே சரணம், குருவே, குணமே, கண்ணே, மணியேகதியே விண்ணே வொளியே சரணம், திருவவதாரா தில்லைமகேச்வரா திருநடன மாடியதேவே தனுஷ்கோடி வாழ்மன்னே சரணம், திரிசையெனும் வளம்பதியில் பார்புகழும் பார்க்கவகுலந்தனில் சீர்வுண்ணும் சிறவன்யான், திருமுத்துசாமி பிள்ளை மகன் பக்திசிரங்கொண்ட வேலாயுதம் பாடினேன் பரஞ்சுடரா, பார்க்கவா சிறிதான கோவில்தனை அரிதாய்கொண்டுள சித்திவிநாயகா கரிமாமுகனே துதித்தேன், போற்றினேன் ஆட்கொண்டருளுவாயே.

ஓம், தத், ஸத்.

223210
Q24 : 417